ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2107/54 - 2019 ජනවාරි මස 26 වැනි සෙනසුරාදා - 2019.01.26

*2107/54 ஆம் இலக்கம் - 2019 ஆம் ஆண்டு சனவரி மாதம் 26 ஆந் திகதி சனிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி III - காணிகள்

## காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

குறிப்பு இல.: ஏஓ/எம்என்/01/07/2014.
காணி அமைச்சின் குறிப்பு இல.: 4/3/2014/ℓ/195.

பாதுகாப்பு தேவையின் பிரகாரம் வேண்டியதான கீழ்க்காணும் காணியை எடுத்துக்கொள்ள அரசாட்சியாளர் எண்ணியிருக்கிறார் என்பதை 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தல் (திருத்தச்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட் பிரிவின் கீழ் நான், இத்தால் அறிவிக்கின்றேன்.

**எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம்:**

வட மாகாணத்தில், மன்னார் மாவட்டத்தில், மன்னார் நகர பிரதேச செயலாளர் பிரிவில், இல. எம்என்/53 கட்டுக்காரன் குடியிருப்பு கிராம அலுவலர் பிரிவில், பாவிலுப்பட்டான் குடியிருப்பு எனப்படும் கிராமத்தில் அமைந்துள்ள, நில அளவையாளர் நாயகத்தினால் 2015.7.14 ஆந் திகதிய வரையப்பட்டவரைபட இல. "எம்என் 741" இல் தொகுதி 01 எனக் காட்டப்பட்டுள்ளதும், மொத்தமாக 4.1359 ஹெக்டயார் விஸ்தீரணத்தை உடைய செல்வாரி எனக்குறிப்பிடப்படும் காணித் துண்டின் விபரம்:

*01.* **துண்டு இல. 741**

காணியின் பெயர்: செல்வாரி; தற்போதைய காணியின் பயன்பாடு: பனந்தோட்டம்; உரிமை கோருபவர்: காணிச் சீர்திருத்த ஆணைக்குழு; ஆரம்ப உரிமையாளர்: காணிச் சீர்திருத்த ஆணைக்குழு; விஸ்தீரணம்: 4.1359 ஹெக்டயார்.

*விசாரணைகள் மேற்கொள்ளப்படும் இடமும் நேரமும்:*

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2019 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 28 ஆந் திகதி மு.ப. 10.00 மணிக்கு மன்னார் பிரதேச செயலகத்தில் என்முன்பாக பிரசன்னமாகுமாறு இத்தால் கேட்டுக்கொள்ளப் படுகின்றனர்.

மேலும் அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும், குறித்த காணியை எடுத்தற்கான நஷ்டஈட்டுத் தொகையையும், அத்தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும் 2019 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 23 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இரு பிரதிகளாக எனக்கு அறிவிக்கும்படியும் இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

கே. சிவசம்பு,
பிரதேச செயலாளர்,
மன்னார்.

பிரதேச செயலகம்,
மன்னார்.

*02 - 393*

1 A - G 29329 - 17 (2019/ 01) இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது.

இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.